# நாகர்கோவில் மாநகராட்சி

## 2023–2024 உத்தேச வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

**குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**

**அடிதழ்இ நிற்கும் உலகு**

தமிழர் மறை – (544)

**குறள் விளக்கம்**

**குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின்**

**அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்**

.............................................................................................




நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
கன்னியாகுமரி மாவட்டம்
நாகர்கோவில் மாநகராட்சிக்கான
புதிய அலுவலகக் கட்டடம்
"கலைவாணர் மாளிகை"
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால்
திறந்து வைக்கப்பட்டது
மதிப்பீடு ரூ. 10.50 கோடி
7.3.2023





# நாகர்கோவில் மாநகராட்சி

## 2023-2024 உத்தேச வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

இந்த நிதியாண்டில் நாகர்கோவில் மாநகராட்சி அனைத்து பகுதி மக்களுக்கும் பரவலாக அத்தியாவசிய வசதிகளும் கிடைக்கப்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் சாலை வசதிகள், தெருவிளக்கு, கழிவு நீரோடை கட்டுதல், குடிநீர் விநியோகம் ஆகியவற்றிற்கு அனைத்து வார்டுகளுக்கும் சமமாக முக்கியத்துவம் கொடுத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

இத்தகைய அடிப்படை வசதிகளையும் பொது சுகாதாரம், பூங்காக்கள், சந்தைகள், நகரமைப்பு முதலிய மேம்பாட்டு வசதிகளையும் மாநகராட்சியின் நிதி, மத்திய மாநில அரசுகளின் மானிய உதவி ஆகியவற்றுடன் இம்மாநகராட்சி மக்களுக்கு அனைத்து வசதிகளையும் தங்கு தடையின்றி செய்ய இயலும் என நம்புகிறோம். இதற்கான இம்மாநகர அனைத்து தரப்பு மக்களின் ஒத்துழைப்பினையும் பொது சேவை நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் முழுமையாக சரியான நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள ஆர்வமாக உள்ளது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒருங்கிணைந்த நிதி நிர்வாகத்தின் மூலம் தேவையற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்தி வருவாய் இனங்களில் ஏற்படும் இழப்பினைத் தவிர்த்து வருவாயை அதிகரிக்கவும் தக்க நிர்வாக நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் நிதி நிர்வாகம் கட்டுப்பாட்டுடன் இருக்கவும் அவசியமான மக்கள் நலப்பணிகளை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்படும். நடப்பு ஆண்டில் இதுவரை மேற்கொண்ட வரவு செலவுகளை அடிப்படையாக கொண்டு 2023-2024-ம் ஆண்டிற்கு உத்தேச வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி உயர்வு, புதிய கட்டிடங்களுக்கான சொத்துவரி மூலம் கூடுதலாக கிடைக்கும் வருமானம், மாநகராட்சி சொத்துக்கள் மூலம் வரும் வருமானங்கள், கட்டிடங்களின் வாடகை மூலம் பெறப்படும் வருமானம் போன்றவற்றை அடிப்படையாக கொண்டும் மாநில நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்படும் நிதி, கேளிக்கை வரி மற்றும் முத்திரைத்தாள் கட்டணங்கள், 5வது நிதிக்குழு பரிந்துரைகளின் மீது அளிக்கப்படும் மானியம் சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைகள் படி அளிக்கப்படும் மானியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் மாநகராட்சிக்கு சேரவேண்டிய அடிப்படை மானியங்களையும் வரவாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## 1. முறைப்படுத்தப்பட்ட நிதி ஆதாரம்

இயற்றலும் ஈட்டலுங், காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு

குறள் 385

**குறள் விளக்கம்**

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி , அதைப் பாதுக்காத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

நாகர்கோவில் மாநகரில் உள்ள கட்டிடங்களில் வரிவிதிப்பு செய்யப்படாத கட்டிடங்கள் மற்றும் குறைவாக வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்கள், அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் ஆகியவை முறைப்படுத்தப்பட்டு (Un–Assessed and Under–Assessed) அக்கட்டிடங்கள் மீது வரி விதிக்கப்பட்டு நிதி ஆதாரம் மேம்படுத்தப்படும். மேலும் மாநகராட்சியின் நிதி ஆதாரத்தினை பெருக்கும் வகையில் உரிய வழி முறைகள் ஆராயப்பட்டு , பொதுமக்கள் பாதிப்படையாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்சமயம் நகர் மேன்மையடைந்து அதிவேக முன்னேற்றத்துடன் அடுக்குமாடி குடியிருப்பு வசதிகளை கொண்டு சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற மாநகருக்கு இணையாக துரிதமாக வளர்ச்சியடைந்து வருகிறது. அதன் படி அரசு வழிகாட்டல் படி புதிய மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் வரிவிதிப்புகள் உரிய வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் வருவாய் இனம் துரிதமாக உயர்ந்து வருகின்றது.

மாநகராட்சியின் நிதி ஆதாரத்தை பெருக்கும் வகையில் எழில்மிகு வணிக வளாகங்களை மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் அமைக்க ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, எழில்மிகு வணிக வளாகம் அமைக்கப்படும்.

## 2.நமக்கு நாமே திட்டம்

நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் 2022–2023–ஆம் ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பேருந்து நிழற்குடைகள், உயர் மின் கோபுர விளக்குகள், மியாவாக்கி அடர்காடு வளர்ப்பு, பூங்கா மேம்பாடு போன்ற அவசியமான மற்றும் பசுமையான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் 2023–24–ம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.1.72 கோடியில் புத்தேரி குளம் அழகுபடுத்துதல் மற்றும் நகரை அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. சாலை அலங்கார கற்கல் பதிக்கும் பணி, நடைபாதை, குளம் மேம்பாடு போன்றவைகள் செய்யப்படவுள்ளது.

## 3. சாலைகள் மேம்படுத்துதல்

மாநகர உள் கட்டமைப்பு வளர்ச்சியின் முதுகெலும்பாக சாலைகள் உள்ளன. நாகர்கோவில் மாநகராட்சியில் தற்சமயம் ஆளூர், தெங்கம்புதூர் பகுதிகள் உள்ளடக்கி 905.490கி.மீ நீளத்தில் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் தற்சமயம் AMRUT குடிநீர் பணி மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளால், பழுதுற்ற சாலைளை பல்வேறு அரசு திட்டங்கள் வாயிலாக மேம்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவையாவும் சாலைப்பதிவேட்டில் சாலை, தெரு, சந்து என வகைப்படுத்தி அதற்கென குறியீட்டு எண் வழங்கி அதன் அடிப்படையில் தேர்வு செய்து முறைப்படுத்தப்படுகிறது.

நடப்பு ஆண்டில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் (TURIF)அபிவிருத்தி திட்டம் மற்றும் மூலதனமானிய நிதியின் (CGF) கீழ் 58.88 கி.மீ நீளத்திற்கு ரூ.36.47 கோடியில் அரசு திட்டப்பணிகள் வாயிலாக சாலை பணிகள் செய்யப்பட்டு முடிவடைந்துள்ளது. நடப்பு ஆண்டிற்குள் முழுமையான சாலை மேம்பாட்டு பணிகள் செய்திட மண்சாலையை தார்சாலையாக தரம் உயர்த்துவதற்கு ரூ.10.00 கோடி எடுக்கப்பட்டுள்ளது. நகர்புற சாலை மேம்பாட்டு கட்டமைப்பு திட்டத்தில் ரூ.30.00 கோடி எடுக்கப்பட்டுள்ளது. நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.7.2 கோடி

எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் பேரிலேயே எதிர்வரும் (2023-2024) ஆண்டுக்கு

| | |
|---|---|
| மண் சாலை தார்சாலை மாற்ற | ரூ.10.00 கோடி |
| Turip சாலைக்கு | ரூ.35.00 கோடி |
| நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் ((NSMT) | ரூ.10.00 கோடி |

விரிவான திட்ட அறிக்கை பெற அரசுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 4. குடிநீர் மேம்பாட்டு திட்டம்

" நீரின்றி அமையாது உலகு "

என்ற குறலுக்கு ஏற்ப நீரின்றி இந்த உலகில் வாழ இயலாது என்பது நாம் அறிந்ததே !

நாகர்கோவில் மாநகராட்சியில் பொதுமக்களுக்கு அனைவருக்கும் தண்ணீர் தங்கு தடையின்றி கிடைத்திடும் வகையிலும், ஒவ்வொரு வீட்டிற்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்குவது முதன்மையான நோக்கமாக கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அம்ரூத்

நாகர்கோவில் மாநகராட்சியில் அம்ரூத் திட்டத்தில் ரூ.296.00 கோடி மதிப்பீட்டில் , புத்தன் அணையினை குடிநீர் ஆதாரமாக கொண்டு குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதில் 93% பணிகள் முடிவடைந்துள்ளது. மேற்படி திட்டம் 31.05.2023 –ல் துவங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முழுமையடையும் பட்சத்தில் மாநகரில் தினசரி 135 Lpcd குடிநீர் விநியோகிக்க இயலும்.

அம்ரூத் 2.0:

குடிநீர் திட்டம் மூலமாக மாநகராட்சியில் இணைக்கப்பட்ட ஆளூர், தெங்கம்புதூர் பகுதிகளில் குடிநீர் அம்ரூத் திட்டத்திற்கு இணையாக வழங்கவும், குடிநீர் குழாய் அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்திடவும், திட்ட பிரேரணை அறிக்கை தயார் செய்யப்பட்டு இவ்வாண்டு நிறைவேற்றும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் அமுல்படுத்திய பின்னர் நகரில் அனைத்து பகுதிகளுக்கும் சீரான இணையான குடிநீர் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 என்ற அளவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட குளங்களை மறு சீரமைக்கும் விதமாக ரூ 95.70 இலட்சம் மதிப்பீட்டில் சூர்யா நகர் குளம் மற்றும் பெதஸ்தா குளம் ஆகிய குளங்களை சீரமைத்து நிலத்தடி நீரை பாதுகாத்து அப்பகுதிகளை அழகுபடுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இவ்வாண்டு புதியதாக இணைக்கப்பட்டுள்ள ஆளூர், தெங்கம்புதூர் பகுதிகளில் தலா ஒரு குளம் மேம்பாடு மற்றும் புதிய பூங்கா என ரூ.3.25 கோடியில் தேர்வு செய்து பணிகள் துவங்கும் நிலையில் உள்ளது.

## 5. ஒளிரும் தெருவிளக்குகள்

மாநகரில் தெருவிளக்குகள், உயர் மின்கோபுர மின் விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகளை மின் சிக்கன விளக்குகளாக மாற்றம் செய்தும், ஒளிரும் தெருவிளக்குகள் மேம்படுத்தும் வகையில் மொத்த சாலைகளின் நீளத்திற்கு ஏற்ப கூடுதல் தெருவிளக்குகள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் மின் ஆற்றல் சேமிப்பு தலைப்பில் எஸ்.கோ (ESCO) தனியார் நிறுவனம் மூலமாக செயல்படுத்தும் வகையில் ரூ.14.64 கோடியில் பணி ஆணை வழங்கி துவக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு வெகுவாக மின் ஆற்றல் சேமிப்பு குறைந்தபட்சம் 50% வரை கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் செலவினம் வெகுவாக குறைய கூடும்.

## 6. பேருந்து நிலையங்கள்

உலக புகழ் வாய்ந்த சுற்றுலா தலமாக திகழும் கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைமையிடமாக நாகர்கோவில் இருப்பதாலும், அண்டை மாநிலமான கேரளா மற்றும் பல்வேறு மாநிலத்தில் இருந்து சுற்றுலா பயணிகள் இங்கு வந்த பிறகே பிற இடங்களுக்கு செல்கின்றனர். அவர்களுக்கு அனைத்து வசதிகளும் பெற வேண்டி ரூ.8.50 கோடி மதிப்பீட்டில்

1) வடசேரி கிறிஸ்டோபர் பேரூந்து நிலையம்.

2) அண்ணா பேரூந்து நிலையம்.

3) ஆம்னி பேரூந்து நிலையங்களை நவீனபடுத்தி மேம்படுத்திடும் பொருட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு ஒருங்கிணைந்த பேரூந்து நிலையம் அமைக்க திட்டமிட்டு வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் மையமாக கொண்டு கனகமூலம் சந்தையினை அண்ணா பேருந்து நிலையத்திற்கு மாற்றம் செய்து, அவ்விடத்தில் நகர பேருந்து நிலையமும், ஆம்னி பேருந்து நிலையமும் மேம்பாடு செய்து ஆக புறநகர் பேருந்து நிலையம், உள்ளூர் பேருந்து நிலையம் மற்றும் மாநில பேருந்து நிலையம் (ஆம்னி பேருந்து நிலையம்) இம்மூன்றையும் இணைத்து ஒரே இடத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க ரூ.65.00 கோடி செலவில் திட்டம் தயார் செய்து இவ்வாண்டின் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 7. பாதாள சாக்கடைதிட்டம்

விரைவான நகரமயமாக்களின் முக்கிய கோரிக்கை பாதாள சாக்கடை திட்டம் அதனை நிறைவேற்றுவதன் பொருட்டு, நம் நாகர்கோவில் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முதற்கட்டமாக Phase 1–ல் ரூ.129.00 கோடி மதிப்பீட்டில் நகரின் மையப்பகுதியில் மட்டும் மேற்கொள்ளப்பட்டு 95% பணிகள் முடிவடைந்துள்ளது. இத் திட்டப்பணியில் 40% மாநகரப்பகுதிகள் பயன்பெறும். இத்திட்டப் பணிகளை நிறைவு செய்வதற்கு கால இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டமாக Phase-II உத்தேச திட்டப்பணியில் ஆளூர், தெங்கம்புதூர் மற்றும் விடுப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணி மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டு , அதற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) TUFISIL தயார் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் முடிவடைந்ததும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் பட்சத்தில் மாநகரில் பொது சுகாதாரம் பேணப்பட்டு சுற்றுசூழல் மேம்படும்.

**நமது புவியை அடுத்த தலைமுறைகள் வாழ ஒரு பாதுகாப்பான ஆரோக்கியமான இடமாக மாற்ற நமது சூழ்நிலை பாதுகாப்போம்.**

## 8. பூங்கா மேம்பாடு பணிகள்

பூங்காகாக்களை மேம்படுத்துதல் நகரின் உள்கட்டமைப்பில் முக்கிய கட்டமாகும். நாகர்கோவில் மாநகரின் மையப்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான சர்.சி.பி.இராமசாமி பூங்கா அமைந்துள்ளது. அவற்றுள் அழகுபடுத்தும் வகையில் பல்வேறு மேம்பாட்டு பணிகள் செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக குழந்தைகள், பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பொது மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

மேலும் மாநகராட்சி பசுமை வெளிகாடுகள் பரப்பளவு அதிகரிக்க வேண்டி, புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மனைபிரிவுகளில் உள்ள 8 பூங்காக்கள் ரூ 1.00 கோடி மதிப்பீட்டில் மூலதன மானிய நிதி (CGF) யின் திட்டம் மூலம் நடைபெற்ற பணிகள் பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

நம் நகரை பசுமையாக்கும் வகையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் தனியார் பங்களிப்பு மூலமாக மியாவாக்கி – அடற்காடுகள் அமைக்கப்பட்டு சுற்றுசூழல் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் புதிய மியாவாக்கி அடர்காடுகள் அமைக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

## 9. இதர உள் கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள்.

நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் மூலதனமானிய நிதியின் கீழ் 7 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம், அறிவுசார் மையம், இரண்டு நவீன ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற உள்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் மூலதனமானிய நிதியின் கீழ் ரூ50.00 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய நகர்புற வாழ்வாதார மைய தங்குமிடத்திற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வகைக்கு 2023–2024–ல்

(i) பிரதான மந்திரி ஜான்விகாஸ் காரியக்கரன் (PMJVK) (2020–2021) ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு சமுதாய கட்டிடம் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது.

(ii) தேசிய நகர்புற சுகாதார குழுமம் (NUHM) (2022–2023)–ல் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் வடிவீஸ்வரம் அரசு ஆரம்ப நகர்புறசுகாதார நிலைய கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

(iii) தேசிய நகர்புற வாழ்வாதார குழுமம் (NULM) (2022–2023) ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் வீடற்றோர்கள் தங்குமிடம் அமைத்திட கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

## 10. திடக்கழிவு மேலாண்மை

**வேண்டும் வேண்டும் நெகிழி இல்லா பூமி வேண்டும்.**

**இந்த பூமி நமக்கானது மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்குமானது,**

என்பதற்கேற்ப நாகர்கோவில் மாநகர பகுதிகளில் சேகரமாகும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகள் தனியாக பிரிக்கப்பட்டு Baling Machine மூலம் கட்டப்பட்டு சிமெண்ட தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. அதே போன்று சேகரமாகும் நெகிழி தண்ணீர் குப்பிகளில், நெகிழி கழிவுகள் வைத்து நிரப்பப்பட்டு

**மாநகராட்சிப்பூங்கா மற்றும் பொது இடங்களில் அலங்கார இருக்கைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.**

மாநகராட்சி 52 வார்டுகளிலும் தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் மூலமாகவும் வீடு வீடாக சென்று நெகிழி கழிவுகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவது குறித்தும் விழிப்புணர்வு பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

## 10(i)பயோ மைனிங் Bio Mining

**மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே சேகரமாகியுள்ள குப்பைகளை விஞ்ஞான ரீதியில் பகுப்பாய்வு செய்ய ரூ9.50 கோடி திருத்திய மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் Bio Mining பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளை இவ்வாண்டுக்குள் முழுமையாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது .**

## 10 (ii) நுண்ணுயிர் செயலாக்க மையம்

**நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகள், வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து கிடைக்கும் தேவையில்லாத பயன்படுத்தப்பட்ட திடப்பொருள்களை சரியான முறையில் நிர்வகிக்கும் வகையில் நாகர்கோவில் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் அமைக்கப்பட்ட 11 எண்கள் நுண்ணுயிர் உரமாக்கல் மையங்கள் மூலம் இயற்கை உரம் தயார் செய்யப்பட்டு வருகிறது.**

**விவசாயிகளுக்கு மலிவான விலையில் ஒரு கிலோ உரம் ஒரு ரூபாய் வீதம் இது வரை ரூ.23,77,247/- விற்பனை செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவில் உரமாக்கல் மையம் இல்லாத பகுதிகளிலும் மக்கும் குப்பைகளை விஞ்ஞான பூர்வமாக உரமாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாநகரில் சுகாதாரம் பேணிக்காத்து சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படும்.**

## 10 (iii) இயற்கை எரிவாயு உற்பத்தி

மாநகரில் மரபு சாரா எரிசக்தி துறையின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளிலிருந்து இயற்கை எரிவாயு (CNG) உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 10 (iv) பைப் கம்போஸ்டிங் (Pipe Composting):

நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் இதுவரை 300-க்கும் மேற்பட்ட வீடுகளில் Pipe Composting மூலம் மக்கும் கழிவுகள் உரமாக்கும் செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதைப் போன்று மாநகராட்சியின் மற்ற குடியிருப்பு பகுதிகளிலும் மானிய விலையில் பைப்புகள் வழங்கி இத்திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 11. பொதுமக்களின் வாழ்வாதாரம் மற்றும் மக்களின் சுகாதாரம்

"சுகாதார மேம்பாடு சமூக மேம்பாட்டுக்கான வழி"

மாநகரில் சுகாதார பிரிவில் ஏற்கனவே உள்ள 5 ஆரம்ப சுகாதார மையங்கள் உள்ளன. இவற்றில் வடசேரி மற்றும் தொல்லவிளை ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறுகள் சிகிட்சை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது புதிதாக 10 எண்கள் நகர்ப்புற சுகாதார மேம்பாட்டு மையங்களும் அருகில் கூடுதலாக நலவாழ்வு மையம் ரூ.2.72 கோடி செலவில் கட்டப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளது.

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன்கோவில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு ரூ.2.00 கோடியே தொல்லவிளை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதலாக கட்டிடங்கள் கட்டுவதற்கும் ரூ.1.00 கோடியும் CGF மூலதன மானியநிதியின் மூலம் ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேசிய நகர்புற சுகாதார குழுமம் (NUHM) திட்டத்தின் மூலம் இம்மாநகராட்சிக்குட்பட்ட பெருவிளை (கிறிஸ்டோபர் காலனி) பகுதியில் ஒரு அரசு

நகர்புற சுகாதார நிலையம் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை பெறப்பட்டதை தொடர்ந்து மேற்படி கட்டிடம் இவ்வாண்டில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் கொண்டுவரப்படும்.

11(i) <u>மக்களைத்தேடி மருத்துவம்</u>

**தமிழக முதல்வர்** அவர்களால் உருவாக்கப்பட்ட இந்திய மருத்துவதுறையின் முன்னோடித்திட்டமான **மக்களை தேடி மருத்துவ திட்டம்** நவம்பர் 24 ம் தேதி 2021–ல் நாகர்கோவில் மாநகராட்சியில் துவங்கப்பட்டது.

நாகர்கோவில் மாநகராட்சியில் 5 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 28 சுகாதார பகுதிகளை உள்ளடக்கி, ஒவ்வொரு பகுதியின் கீழும் ஒரு பெண் சுகாதார தன்னார்வலர் என்ற வீதம் மொத்தம் 28 நபர்கள் நியமிக்கப்பட்டு, 52 வார்டு பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இத்திட்டத்தில் ஒரு வாகனமும், இயன்மருத்துவர் (Physiotherapist), ஆதரவுசெவிலியர் (Palliative Staff Nurse) ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 28 பெண் சுகாதார தன்னார்வலர்கள் மூலம் 177685 பேர் நீரழிவு மற்றும் இரத்த அழுத்தத்திற்கான பரிசோதனை செய்யப்பட்டு 14964 நபர்கள் இத்திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனையில் பயன்பெற்று வருகின்றனர். மேலும் 17682 பேர் தனியார் மருத்துவமனையில் சிகிட்சை பெற்று வருகின்றனர்.

<u>12. புதிய வாகனங்கள் மற்றும் கண்காணிப்பு கருவி பொருத்துதல்</u>

நம் மாநகராட்சிப் பகுதிகளில் குப்பையில்லா மாநகரமாக மாற்ற தூய்மை பணிகளுக்காக 57 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் புதிய வாகனங்கள் 20 எண்ணம் (6 டெம்போ, 14 LCV) வாங்கப்பட்டுள்ளது. அனைத்து வாகனங்களிலும் எரிபொருள் கண்காணிப்பு கருவிகள் மற்றும் வாகன செயல்பாட்டு கண்காணிப்பு கருவி GPS பொருத்தப்படும். மேலும் கனரக வாகனங்கள், JCB, Hitachi, Mini Hitachi போன்ற வாகனங்கள் தூர்வாரும் பணிக்கு வாங்கப்பட்டு பயன்பாட்டில்

உள்ளது. மேலும் Suction cum Jetting Rodding Machine பாதாள சாக்கடை அடைப்பு, கல்வெட்டு அடைப்பு பணிக்கு இவ்விரண்டும் வாங்க அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

## 13. தெருநாய்கள் கட்டுப்படுத்துதல்

தெருநாய் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு நீதிமன்ற வழிகாட்டுதலின்படி தெருநாய்களின் எண்ணிக்கையை குறைக்ககருத்தடை செய்து தெருநாய்களின் இனப்பெருக்கம் பெருமளவில் கட்டுப்படுத்தப்படும்.

## 14, நீர் நிலைகளை தூய்மைப்படுத்துதல்

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் "

ஔவையார்

நாகர்கோவில் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள சபையார்குளம், சுப்பையாகுளம், நீராழிகுளம், செம்மாங்குளம், பறக்கின்கால், மற்றும் பழையாறு ஆகிய நீர்நிலைகளை மற்றும் உபநீர்வழித்தடங்கள் தூய்மைப்படுத்தி தூர்வாரி நீராதாரத்தை வளப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 15. வேலை வாய்ப்புக்களை உருவாக்க பயிற்சியளித்தல்

நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதிகளில் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் விதமாக போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் CLC மூலம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதன் மூலம் எதிர்காலத்தில் போட்டித் தேர்வுகளில் வென்று வேலைவாய்ப்பை எளிதில் பெற்றிட முடியும் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## 16. புதிய அலுவலக கட்டிடம்

நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்திற்கான புதிய அலுவலக கட்டிடம் பாலமோர் ரோட்டில் ரூ. 10.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு 07.03.2023 –இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைத்து செயல்பட்டு வருகிறது. இவ்வாண்டு மேற்படி கட்டிடத்திற்கு மேலும் ரூ.1.00 கோடி செயல்

அலுவலகத்திற்கான வசதிகள் செய்திட திட்ட மதிப்பீடு தயார் செய்து பொது நிதி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 17. மக்களுடன் மேயர்

நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 52 வார்டுகளுக்கும் மேயர் நேரடியாக சென்று மக்களின் குறைகளை கேட்டறிந்து வருகிறார், அதனடிப்படையில் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

மாநகர மக்கள் தங்களின் புகார்களையும், கோரிக்கைளையும் மேயரிடம் தெரிவிக்கும் வண்ணம் மக்களின் வசதிக்காக **மேயரின் முகாம் அலுவலகம்** காலை 8.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை செயல்பட்டு வருகிறது. மேலும் **Whatsapp (9487038984 )** மூலமாகவும் தெரியப்படுத்தலாம். மேயர் தினசரி ஒவ்வொரு வார்டுகளுக்கும் சம்மந்தப்பட்ட வார்டு உறுப்பினர் மற்றும் மாநகராட்சி பல்துறை அலுவலர்களுடன் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டு 52 வார்டுகளிலும் எந்தெந்த பணிகள் செய்திடலாம் அவற்றுள் உடன் நடவடிக்கை , இடைக்கால நடவடிக்கை, வருட கால நடவடிக்கை என்ற அடிப்படையில் பணிகள் தேர்வு செய்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுள் வரும் எதிர்கால பணிகள் மேற்கொள்ள திட்ட மதிப்பீடு ரூ.267.50 கோடி தயார் செய்து அதனை பல்வேறு எதிர்வரும் திட்டப்பணிகள் வாயிலாகவும் சிறப்பு நிதி பெறவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 18. வெளிப்படை நிர்வாகம்

நாகர்கோவிலின் மாநகராட்சியின் நிர்வாக செயல்பாட்டினை பொதுமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் மாநகராட்சியின் இணையதளம் பக்கம் <http://www.nagercoilcorporation.in > மேம்படுத்தப்படும். இதன் மூலம் மாநகராட்சியில் நடைபெறும் பணிகளுக்கான டெண்டர், குத்தகை விபரங்கள், காலியாக உள்ள கடைகளின் விபரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் பொதுமக்கள் தங்களின் புகார்களையும், கோரிக்கைகளையும் **Whatsapp (9487038984 )** மூலமாகவும் தெரியப்படுத்தலாம்.



## Budget 2023-2024

### Revenue Fund - Income

| Sl.No | Description of items | Amount £ |
|---|---|---|
| 1 | Tax Revenue | 600905425 |
| 2 | Assigned Revenues & Compensations | 25000000 |
| 3 | Rental Income from Municipal Properties | 72514156 |
| 4 | Fees & User Charges | 74410397 |
| 5 | Sale & Hire Charges | 3750000 |
| 6 | SFC Grant | 280000000 |
| 7 | Scheme Grants | 1251900000 |
| 8 | Income from Investments | 6000000 |
| 9 | Interest Earned | 1100000 |
| 10 | Other Income | 34254572 |
| | **Total** | **2349834550** |

### Revenue Fund - Expenditure

| Sl.No | Description of items | Amount £ |
|---|---|---|
| 1 | Establishment Expenses | 442959488 |
| 2 | Administrative Expenses | 16815000 |
| 3 | Operations & Maintenance | 346280000 |
| 4 | Interest On loans | 77834522 |
| 5 | Other Expenses (Dengue) | 30000000 |
| 6 | WSIS (AMRUT) | 230000000 |
| 7 | Scheme Grants Expenses | 1251900000 |
| | **Total** | **2395789010** |
| | **Deficit** | **-45954460** |

### 1. Tax Revenue

| Fund | Section | Account Code | Major Code | Account Description | 2023-2024 |
|---|---|---|---|---|---|
| General Fund | Revenue | 91-110-01-01 | 110 | Property Tax - Residential (சொத்துவரி – குடியிருப்பு) | 143722109 |
| General Fund | Revenue | 91-431-10-06 | 110 | Property Tax - Recoverable - Residential - Arrears (சொத்துவரி – குடியிருப்பு நிலுவை) | 37919456 |
| General Fund | Revenue | 91-110-01-03 | 110 | Property Tax - Industrial (சொத்துவரி – தொழிற்சாலை) | 71898870 |
| General Fund | Revenue | 91-431-10-08 | 110 | Property Tax - Recoverable - Industrial - Arrears (சொத்துவரி – தொழிற்சாலை நிலுவை) | 11567050 |
| General Fund | Revenue | 91-110-01-05 | 110 | Property Tax - Others | 0 |
| General Fund | Revenue | 91-110-01-02 | 110 | Property Tax - Commercial (சொத்துவரி – வணிகம்) | 185424782 |
| General Fund | Revenue | 91-431-10-07 | 110 | Property Tax - Recoverable - Commercial - Arrears (சொத்துவரி – வணிகம் நிலுவை) | 60000000 |
| General Fund | Revenue | 91-110-01-04 | 110 | Property Tax - Vacant Sites (சொத்துவரி – காலிமனை வரி) | 7684358 |
| General Fund | Revenue | 91-431-10-09 | 110 | Property Tax - Recoverable - Vacant sites - Arrears (சொத்துவரி – காலிமனை வரி நிலுவை) | 14700000 |
| General Fund | Revenue | 94-110-10-01 | 110 | Professional Tax (தொழில் வரி) | 63988800 |
| General Fund | Revenue | 94-431-19-04 | 110 | Profession Tax - Recoverable - Arrears (தொழில் வரி நிலுவை) | 4000000 |
| General Fund | Revenue | 92-110-51-01 | 110 | Octroi & Toll | 0 |
| General fund | Revenue | 91-431-10-10 | 110 | Property Tax - Recoverable - Others - Arrears | 0 |
| | | | | **Total** | **60,09,05,425** |

### 2. Assigned Revenues & Compensations

| Fund | Section | Account Code | Major Code | Account Description | 2023-24 |
|---|---|---|---|---|---|
| General Fund | Revenue | 98-120-10-01 | 120 | Duty on Transfer of Property (சொத்து பதிவு செய்வதில் வரப்பெறும் முத்திரை கட்டணம்) | 21046977 |
| General Fund | Revenue | 98-120-10-02 | 120 | Entertainment Tax (கேளிக்கை வரி) | 3953023 |
| | | | | **Total** | **2,50,00,000** |

## 3. Rental Income from Municipal Properties

| Fund | Section | Account Code | Major Code | Account Description | 2023-24 |
|---|---|---|---|---|---|
| General Fund | Revenue | 83-130-10-06 | 130 | Fees for Bays in Bus Stand (பேருந்து நுழைவு கட்டணம்) | 5392085 |
| General Fund | Revenue | 58-130-10-01 | 130 | Rent from Shopping Complex/Markets (கடைகளுக்கான வாடகை கட்டணம்) | 45360000 |
| General Fund | Revenue | 55-130-10-02 | 130 | Rent from Community Hall (சமுதய நலக்கூடம் வாடகை கட்டணம்) | 1479760 |
| General Fund | Revenue | 58-130-10-03 | 130 | Market Fees - Daily Market (சந்தை கட்டணம் – தினசரி சந்தை) | 3001000 |
| General Fund | Revenue | 58-130-10-04 | 130 | Market Fees - Weekly Market (வார சந்தை) | 3875265 |
| General Fund | Revenue | 58-130-10-05 | 130 | Private market fees (தனியார் சந்தை கட்டணம்) | 657300 |
| General Fund | Revenue | 83-130-10-07 | 130 | Cart Stand/ Lorry Stand/ Taxi Stand/ Cycle stand Fees (வண்டி, லாரி, டாக்ஸி ஸ்டாண்டு கட்டணம்) | 2617567 |
| General Fund | Revenue | 61-130-10-08 | 130 | Avenue receipts (பலன் தரும் மரங்கள் மூலம் வருமானம்) | 50000 |
| General Fund | Revenue | 06-130-20-01 | 130 | Rent on Buildings - Staff quarters (கட்டிடங்கள் மூலம் வருமானம்) | 400000 |
| General Fund | Revenue | 06-130-40-01 | 130 | Rent on Lease of Lands (நிலங்கள் மூலம் வருமானம்) | 1619760 |
| General Fund | Revenue | 42-130-80-05 | 130 | Pay And Use Toilet (நவீன கட்டண கழிப்பிடங்கள் மூலம் வருமானம்) | 3000000 |
| General Fund | Revenue | 83-130-80-03 | 130 | Parking Fees (வாகனம் நிறுத்தும் இடம்) | 1500000 |
| General Fund | Revenue | 90-130-80-07 | 130 | Track rent (சாலைகள் தோண்டப்படுவதற்கான கட்டணம்) | 3561419 |
| **Total** | | | | | **7,25,14,156** |

## 4. Fees & User Charges

| Fund | Section | Account Code | Major Code | Account Description | 2023-24 |
|---|---|---|---|---|---|
| General Fund | Engineering | 12-140-10-01 | 140 | Contractors/Suppliers/Licensed Surveyors/Plumbers/Others - General Fund (ஒப்பந்தக்காரர்கள் / வினியோகதாரர்கள் / சர்வேயர் மூலம் வருமானம்) | 100000 |
| General Fund | Engineering | 20-140-40-04 | 140 | Contractors/Suppliers/Licensed Surveyors/Plumbers/Others-Renewal Fees - General Fund (ஒப்பந்தக்காரர்கள் / வினியோகதாரர்கள் / சர்வேயர் மூலம் புதுபித்தல் வருமானம்) | 100000 |
| General Fund | Engineering | 21-140-70-01 | 140 | Road Cutting Restoration Charge - Eb - Water Supply and Drainage Fund (சாலைகள் தோண்டப்படுவதற்கான கட்டணம்) | 12000000 |
| General Fund | Health | 30-140-11-01 | 140 | D&O Trade Licence Fees (உணவு கலப்பட உரிமை கட்டணம்) | 4400000 |
| General Fund | Health | 02-140-13-01 | 140 | Copy Application Fees (விண்ணப்பத்தின் பெயரில் வழங்கப்படும் நகல் கட்டணம்) | 310000 |
| General Fund | Health | 37-140-13-02 | 140 | Birth & Death Certificate Fees (பிறப்பு மற்றும் இறப்பு சான்று மூலம் வருமானம்) | 650000 |
| General Fund | Health | 41-140-50-10 | 140 | SWM - User Charges (திடக்கழிவு மேலாண்மை –உபயோகிப்பாளர் கட்டணம்) | 22100000 |
| General Fund | Revenue | 45-140-11-04 | 140 | Fees for Slaughter House ( ஆடு மற்றும் மாடடி சாலை கட்டணம்) | 152246 |
| General Fund | Revenue | 11-140-12-02 | 140 | Fees under Places of Public Resorts Act (பொது கேளிக்கை உரிம கட்டணம்) | 100000 |
| General Fund | Revenue | 02-140-13-01 | 140 | Copy Application Fees (விண்ணப்பத்தின் பெயரில் வழங்கப்படும் நகல் கட்டணம்) | 100000 |
| General Fund | Revenue | 61-140-60-01 | 140 | Garden / Parks Receipts (தோட்டங்கள் (ம) பூங்காக்கள் வரவுகள்) | 1970191 |
| General Fund | Revenue | 90-140-60-04 | 140 | Library receipts (10% collection of Library Cess) (நூலக வரி கட்டணம்) | 13901322 |

| Fund | Section | Account Code | Major Code | Account Description | 2023-24 |
|---|---|---|---|---|---|
| General fund | Town Planning | 12-140-10-01 | 140 | Contractors/Suppliers/Licensed Surveyors/Plumbers/Others (ஒப்பந்தக்காரர்கள் / வினியோகதாரர்கள் / சர்வேயர் மூலம் வருமானம்) | 1000000 |
| General fund | Town Planning | 12-140-11-03 | 140 | Building Licence Fees (கட்டிட உரிம கட்டணம்) | 9110650 |
| General fund | Town Planning | 11-140-14-05 | 140 | Unapproved Layout - Development charges (அங்கீகரிக்கப்படாத மனைபிரிவிற்கான வளர்ச்சி கட்டணம்) | 7897901 |
| General fund | Town Planning | 11-140-14-06 | 140 | Centage charges | 160380 |
| General fund | Town Planning | 12-140-14-04 | 140 | Sub Division Fees | 40000 |
| General fund | Town Planning | 11-140-15-01 | 140 | Encroachment Fee (ஆக்கிரமிப்பு கட்டணம்) | 5000 |
| General fund | Town Planning | 11-140-15-02 | 140 | Demolision Charges (இடிபாடுகளுக்கான கட்டணங்கள்) | 200000 |
| General fund | Town Planning | 11-140-40-02 | 140 | Survey Fees | 74520 |
| General fund | Town Planning | 12-140-40-04 | 140 | Contractors/Suppliers/Licensed Surveyors/Plumbers/Others-Renewal Fees (ஒப்பந்தக்காரர்கள் / வினியோகதாரர்கள் / சர்வேயர் மூலம் புதுப்பித்தல் வருமானம்) | 18057 |
| General fund | Town Planning | 42-140-50-08 | 140 | Garbage/Debris collection (குப்பைகள் சேகரம் மூலம் வருமானம்) | 20130 |
| **Total** | | | | | **7,44,10,397** |

### 5. Sale & Hire Charges

| Fund | Section | Account Code | Major Code | Account Description | 2023-24 |
|---|---|---|---|---|---|
| General Fund | Engineering | 02-150-11-01 | 150 | Sale of tender forms/other publications (ஒப்பந்தப்புள்ளி படிவ விற்பனை மூலம் | 50000 |
| General Fund | Engineering | 02-150-12-02 | 150 | Sale of Scrap (இரும்பு (ம) பொருட்கள் விற்பனை) | 900000 |
| General Fund | Health | 41-150-10-02 | 150 | Sale of Compost/Manure/Grass/Usufructs (உரம் விற்பனை மூலம் வரவு) | 400000 |
| General Fund | Revenue | 42-150-10-03 | 150 | Amma Unavagam-Sale Of Food (அம்மா உணவகம் – உணவு விற்பனை மூலம் வருமானம்) | 2400000 |
| **Total** | | | | | **37,50,000** |

## 6. SFC Grant

| Fund | Section | Account Code | Major Code | Account Description | 2023-24 |
|---|---|---|---|---|---|
| General Fund | Accounts | 03-160-10-04 | 160 | Devolution Fund (including State Finance Commission Fund) (மாநில நிதி பகிர்வு மானியம்) | 280000000 |
| **Total** | | | | | **28,00,00,000** |

## 7. Scheme Grant Details

| Sl.No | Grant Details | Amount |
|---|---|---|
| 1 | Grants from State Government (Employment) (நகர்புற வேலைவாய்ப்பு திட்டம்) | 30000000 |
| 2 | TURIF, மூலதன மானிய நிதி | 994400000 |
| 3 | Grant for natural calamities - GF (இயற்கை இடர்பாடுகள் மானியம்) | 100000000 |
| 4 | M.P.Fund (பாராளுமன்ற உறுப்பினர் நிதி) | 10000000 |
| 5 | M.L.A.Fund (சட்டமன்ற உறுப்பினர் நிதி) | 10000000 |
| 6 | Public Contribution NNT Scheme (நமக்கு நாமே திட்டம்) | 7500000 |
